சுற்றறிக்கை இலக்கம்: எம்19/13/2006

எனது இல: எம் 19/விவிதி/04
பதிவாளர் நாயகம் திணைக்களம்
280, பிரதான வீதி,
கொழும்பு 11.
2006 டிசம்பர் 18

அனைத்து மாவட்ட செயலாளர்கள் / மேலதிக பதிவாளர் நாயகங்கள்,
பிரதேச செயலாளர்கள் / மாவட்ட பதிவாளர்கள்,
விவாகப் பதிவாளர்களுக்கு

**2006 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க (பொது) விவாகப்**
**பதிவு (திருத்தச்) சட்டம் - (பொது) விவாகப்**
**பதிவு கட்டணங்களைத் திருத்தம் செய்தல்.**

2006 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க விவாகப் பதிவு (திருத்தச்) சட்டத்தின் பிரதி ஒன்றை இத்துடன் இணைத்து அனுப்புகின்றேன்.

02. இத்திருத்தச் சட்டத்தின் மூலம், 1997 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட (112 ஆம் அத்தியாயமான) விவாகப் பதிவுச் சட்டத்தின் 2 ஆம் உப அட்டவணையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விவாகப் பதிவு தொடர்பான கட்டணங்கள் பின்வருமாறு மீண்டும் திருத்தப்பட்டுள்ளன.

**இரண்டாம் உப அட்டவணை (பிரிவு 62)**

| | செயல்பாடு | யாருக்கு செலுத்தப்பட வேண்டும் | யாரால் செலுத்தப்பட வேண்டும் | தொகை | செலுத்தும் முறை |
|---|---|---|---|---|---|
| 1. | அவரது அலுவலகத்தில் விவாக அறிவித்தலை உட்படுத்தல் | பதிவாளர் | விண்ணப்பதாரர் | ரூ. 50.00 | பணமாக செலுத்தப்பட வேண்டும் |
| 2. | வேறு ஏதேனும் இடத்தில் விவாக அறிவித்தலை உட்படுத்தல் | பதிவாளர் | விண்ணப்பதாரர் | ரூ. 100.00 | பணமாக செலுத்தப்பட வேண்டும் |
| 3. | அவரது அலுவலகம் தவிர்ந்த வேறு ஏதேனும் இடத்தில் விவாக அறிவித்தலை உட்படுத்தல் | மேலதிக மாவட்ட பதிவாளர் | விண்ணப்பதாரர் | ரூ. 100.00 | முத்திரைகள் மூலம் |
| 4. | அவரது அலுவலகம் தவிர்ந்த வேறு ஏதேனும் இடத்தில் விவாக அறிவித்தலை உட்படுத்தல் | மாவட்ட பதிவாளர் | விண்ணப்பதாரர் | ரூ. 150.00 | முத்திரைகள் மூலம் |
| 5. | அவரது அலுவலகத்தில் விவாகத்தை நிகழ்த்துதல் | பதிவாளர் | விவாகத் தரப்பினர் | ரூ. 250.00 | பணமாக செலுத்தப்பட வேண்டும் |
| 6. | அவரது அலுவலகத்தில் விவாகத்தை நிகழ்த்துதல் | மேலதிக மாவட்ட பதிவாளர் | விவாகத் தரப்பினர் | ரூ. 100.00 | முத்திரைகள் மூலம் |
| 7. | அவரது அலுவலகத்தில் விவாகத்தை நிகழ்த்துதல் | மாவட்ட பதிவாளர் | விவாகத் தரப்பினர் | ரூ. 100.00 | முத்திரைகள் மூலம் |